# 17-வது சுற்று கோமாரிநோய் தடுப்பூசிப்பணி தொடர்பான பத்திரிக்கைச்செய்தி

நாமக்கல் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு 17-வது சுற்று கோமாரிநோய் தடுப்பூசிப்பணி 2019ஆம் ஆண்டு அக்டோபர் 14 முதல் 21 நாட்கள் நடைபெற உள்ளது. மாவட்டத்தில் மொத்தமுள்ள 353050 கால்நடைகளுக்கும் 100 சதவீதம் முழுமையாக இத்தடுப்பூசி போடப்பட உள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளைக்கொண்டு ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடத்தப்படும். அந்தந்த அலுவலர்கள் செய்ய வேண்டிய பணிகள் எடுத்துரைக்கப்படவுள்ளது. 02.10.2019 அன்று அனைத்து கிராமங்களிலும் நடைபெறும் சிறப்பு கிராமசபைக்கூட்டத்தில் விவாதப் பொருளாக வைத்து கோமாரி நோய் தடுப்பூசி பணி தொடர்பாக எடுத்துரைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த கிராமசபை கூட்டத்தில் கிராம மக்கள் அனைவரும் பங்கேற்று கால்நடை மருத்துவர்கள் கூறும் அறிவுரைப்படி கால்நடைகளை அவர்களால் குறிப்பிடப்படும் தேதியில் குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்று கோமாரி நோய் தடுப்பூசி போட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அந்தந்தப் பகுதி கால்நடை உதவி மருத்துவர்கள் மூலம் முன்கூட்டியே தடுப்பூசி போடப்படும் விவரம் நன்கு விளம்பரப்படுத்தப்படும்.

இத்தடுப்பூசிப்பணிக்காக மாவட்டம் முழுவதும் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்டு 104 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டு மாவட்டத்திலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் நேரில் சென்று அந்தந்த கிராமங்களிலேயே கோமாரி நோய் தடுப்பூசிப்பணிகள் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, நாமக்கல் மாவட்ட விவசாய பெருமக்கள் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட கன்றுகள், பசு, எருது, எருமை ஆகிய கால்நடைகளை அழைத்துச் சென்று 14.10.2019 முதல் ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிடப்பட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் முகாம்களில் தங்களது கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி தவறாது போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஓம்/-கா.மெகராஜ் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**